முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அதே நேரத்தில் சில சில இடங்களில், சில சில பிரச்சினைகள் எழுகின்றன. அந்தப் பிரச்சினையைத்தான் தங்களிடத்திலே நான் சுட்டிக்காட்டினேன். ஏரிப்புறக்கரை கிராமத்தில் நீங்கள் சொன்ன அந்த 45 ரூபாய் கட்டப் பட்டிருக்கிறது. அந்தத் தொகை கட்டப்பட்டிருந்தும் கூட அவர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. ஏரிப்புறக் கரை, புதுப்பட்டினம் போன்ற கிராமங்களையும் சேர்த்து, இந்தத் துயர்துடைப்பு மானியத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு தி. ந. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன்பாக இந்தத் திட்டத்திலே ஏறக்குறைய 9 ஆயிரம் மீனவர்கள்தான் சேர்ந்திருந்தார்கள். ஆனால் படிப்படியாக இப்போது ஏறக்குறைய நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக 1,75,000 மீனவர்கள் இந்தத் திட்டத்திலே சேர்ந்து, தமிழகம் முழுமையுமே, ஏறக்குறைய 442 கிராமங்களும் முழுமையான அளவிற்கு பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். 1995-96-ஆம் ஆண்டிற்கு மட்டும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் 11 கோடி ரூபாயை மானியமாக வழங்கி இருக்கிறார்கள். ஏரிப்புறக்கரை மீனவ கிராமத்திலிருந்து இந்தக் குறையைத் தீர்க்க வேண்டுமென்று எந்த மனுவும் வரவில்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை ஏற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 179, திரு. என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

179—

அறங்காவலர்கள் நியமனம்

*38186—திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1996 மார்ச் 1]

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதி, உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலயத்திற்கு அறங்காவலர்கள் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): காட்டுமன்னார்கோயில் தொகுதி உடையார்குடி அருள்மிகு அனந்தீஸ்வரர் ஆலயத்திற்கு 5 பிரமுகர்கள் கொண்ட அறங்காவலர் குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டு உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். ஆர். ராஜேந்திரன் அவர்களும் அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலுக்கு குழு அமைக்க தாமதம் ஏற்பட்டதால், குழு அமைப்பதற்கு முன்பு இக்கேள்வி போடப்பட்டதாகும். மேலும் பொதுவாக கடைவீதிகளில் ரூபாய் 2 ஆயிரம் வாடகை வசூலிக்கக்கூடிய கடைகளுக்கு, அருகிலுள்ள கோயிலுக்குச் சொந்தமான கடைகளில் ரூ. 2/- மட்டுமே வாடகையாக வசூலிக்கும் நிலைமை உள்ளது. மற்றும் குடிசை போட்டு கோயில் நிலத்தில் வாழ்ந்து வந்த ஏழைகளெல்லாம் வசதி வாய்ப்பு வளர்ந்த காரணத்தால் மாடிவீடுகள் கட்டி வாழ்கிறார்கள். இவர்களும் 1 ரூபாய், 2 ரூபாய் வாடகையே செலுத்துகிறார்கள். நன்றாய் விளையக்கூடிய... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜேந்திரன், நீங்கள் கேட்ட கேள்வி, இந்த கோயிலுக்கு அறங்காவலர் குழு அமைக்கப்படுமா என்பதுதான். 2 ரூபாய் வாடகை, 200 ரூபாய் வாடகை பற்றியெல்லாம் கேட்பதற்குத் தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளைக் களையவேண்டுமென்பதற்காகத்தான் குழு சீக்கிரமாக அமைக்கவேண்டுமென்று கேட்டிருந்தேன். நன்றாய் விளையக்கூடிய கோயில் நிலங்களில் பயிர் செய்பவர்கள் நல்ல மகசூல் அடைந்தபோதிலும், ஒரு மூட்டை நெல்கூட குத்தகையாக அளக்காமல் பழைய முறைகளேயே கையாண்டு வருகிறார்கள். எவ்வளவோ

புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி காட்டிய இதய தெய்வம் ஆட்சியில் மற்ற டிபார்ட்மெண்டுகளுக்கு பொதுப்பணித் துறை மூலம் வாடகை நிர்ணயிப்பது போல, அறநிலையத் துறையிலும் புதிய வாடகையை, குத்தகை நிர்ணயம் செய்ய ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒரு விசாரணை நடத்தி, குற்றம் இருப்பின் உடனடியாக அதற்குரிய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 180, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

180—

நடைபாதைக்கு மேற்கூரை அமைத்தல்

**40268—திரு. செ.து. வரதராஜன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருமலைக்கு வெயிலில் படியேறுவது சிரமமாக இருப்பதால் நடைபாதைக்கு மேற்கூரை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருமலையிலுள்ள நடைபாதைக்கு மேற்கூரை அமைக்கும் திட்டம் தற்போதில்லை.

முற்பகல் 11-30

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்பக்கலைக் களஞ்சியமாக, தெய்வமணம் கமழும் இடமாக இந்தியாவிலேயே, ஏன் அகில உலகத்திலேயே தமிழ்நாடுதான் மிகச்